5. அரசின் தீர்மானங்கள்.

(1) உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே,

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியை யொட்டி, 1975—76-ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக்குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"

என்ற தீர்மானத்தை முன் மொழிகின்றேன்.

மாணபுமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியை யொட்டி, 1975–76-ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை, மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத்தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு மூலம், விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக் கிணங்க, தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்கு முறை விதிகளின் 2 (1) ஒழுங்கு முறை விதிக்கிணங்க, 1975–76-ஆம் நிதியாண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கு, கீழ்க் காணும் நிகழ்ச்சி நிரலை வரையறுக்கிறேன்.

நியமனப் படிவங்கள் வரப்பெறுவதற்கான நாளும், நேரமும்.	1—4—1975 மாலை 5-00 மணி
நியமனப் படிவங்களைச் சரி பார்ப்பதற்கான நாளும், நேரமும்.	1—4—1975 மாலை 6-00 மணி
நியமனப் படிவங்களைத் திரும்பப் பெறுவதற்கான நாளும், நேரமும்.	2—4—1975 மாலை 5-00 மணி

நியமனப் படிவங்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை ஒன்பது பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதுமிருப்பின், வாக்குப் பதிவு நடைபெறும் நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.